பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

| | | |
|---|---|---|
| 04 11 2024 | 6 45 | செய்தி ஆசிரியர் |
| திங்கட்கிழமை | காலை | ஜெ. காமராஜ் |

வணக்கம். மாநில செய்திகள் - வாசிப்பவர் - ஜமீர் அக்தர்

தலைப்புச் செய்திகள்

1. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள ஜார்கண்ட் மாநிலத்தில் பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

2. தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் இருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

3. நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு இடையிலான கப்பல் போக்குவரத்து வாரத்திற்கு 5 நாட்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. தீபாவளிப் பண்டிகையை முடித்து பயணிகள் சென்னை திரும்ப வசதியாக சிறப்பு முன்பதிவில்லா ரயில்களை இயக்கியதற்கு மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

5. தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி இன்று சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள ஜார்கண்ட் மாநிலத்தில் பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காலை மணி 11.30க்கு **Garhwa** நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

பின்னர் மாலை 3 மணிக்கு **Chaibasa** மாவட்டத்தில் நடைபெறும் பிரச்சாரத்தில் அவர் பங்கேற்பதாக பிஜேபி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. பாபுலால் மராண்டி தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அங்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி முதல் முறையாக பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதம் திட்டத்தின்கீழ் ரயில் நிலையங்களை மேம்படுத்தும் பணியில் இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 334 ரயில் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் ரயில்வே பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு, மக்கள் நலனை கருத்தில் கொண்டு ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பின்னர் கோவை ரயில் நிலையம் வந்த அவரிடம், தமிழகத்தின் மேற்கு மண்டலங்களில் ரயில்வே வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தக் கோரி ரயில்வே பயணிகள் அமைப்பினர் மற்றும் மாவட்ட தொழில்துறையினர் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

முன்னதாக அவருக்கு பிஜேபி மகளிர் அணித் தலைவரும், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான திருமதி வானதி ஸ்ரீனிவாசன், மாநில பொருளாளர் எஸ்.ஆர். சேகர் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பளித்தனர்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை முடித்து பயணிகள் சென்னை திரும்ப வசதியாக சிறப்பு முன்பதிவில்லா ரயில்களை இயக்கியதற்கும், மதுரையில் இருந்து சென்னைக்கு முதல் முறையாக கழிப்பறை வசதியுடன் கூடிய புறநகர் மின்சார ரயில் சேவையை இயக்கியதற்கும் மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

வழக்கமான இரண்டாம் வகுப்பு முன்பதிவில்லா **MEMU** என்று அழைக்கப்படும் **Main Line Electric Multiple Unit** ரயில் இயக்கப்பட்டது தங்களுக்கு வசதியாக இருந்ததாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ரயில் சோழவந்தான், திண்டுக்கல், மணப்பாறை, திருச்சி, ஸ்ரீரங்கம், அரியலூர், விருத்தாச்சலம், விழுப்புரம், செங்கல்பட்டு ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் வகையில் இயக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கானோர் இந்த ரயில் பயன்படுத்தினர்.

பயணிகளின் தேவை அறிந்து சேவை செய்த தெற்கு ரயில்வேக்கு பலரும் நன்றி தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி. சங்கர் மறைவுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் செய்யாறு உதவி ஆட்சியராக தனது பணியை துவங்கிய அவர், மாநிலத்தின் பல்வேறு பொறுப்புகளிலும், மத்திய அரசின் செயலாளர் பதவிகளிலும் திறம்பட நேர்மையுடன் பணியாற்றினார்.

அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர் மற்றும் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்கு தனது ஆறுதலை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் இருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவத் துறையின் விழிப்புணர்வு பிரச்சாரம் காரணமாக தமிழ்நாட்டில் டெங்கு பரவல் தடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு இடையிலான கப்பல் போக்குவரத்து வாரத்திற்கு 5 நாட்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 16ஆம் தேதி முதல் இரு நாடுகளுக்கு இடையே பிரதமர் திரு. நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருச்செந்தூரில் நடைபெற்று வரும் கந்தசஷ்டி விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி புகழேந்தி ஆய்வு மேற்கொண்டார்.

கந்தசஷ்டி திருவிழாவிற்காக வரும் பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து அவர் நேரில் ஆய்வு செய்தார்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டைகைகள், புதிதாக திறக்கப்பட்ட விடுதிகள், அதில் அமைந்துள்ள வசதிகள் குறித்து பக்தர்களிடம் அவர் கேட்டறிந்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரியாவின் பெனிசுலா அருகே தென்கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய 3 நாடுகள் இணைந்து விமான போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டன.

-----------

ஹிஸ்புல்லா அமைப்பின் 2 முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

-----------

உகாண்டாவில் உள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்த 13 குழந்தைகள் அங்குள்ள தேவாலயத்தில் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தபோது இடி மின்னல் தாக்கியதில் உயிரிழந்தனர்.

-----------

தில்லியில் காற்றுமாசின் அளவு அதிகரித்துள்ளது. இது 381 என்ற அளவில் இருந்ததாகவும், சில பகுதிகளில் 432, 400 என்ற அளவுகளில் இருந்ததாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------

ஹரியானாவில் விவசாயக் கழிவுகளை தீயிட்டு எரிக்க வேண்டாம் என்று அம்மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. ஷியாம்சிங் ரானா விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

கனமழை காரணமாக நீலகிரி குன்னூர் தாலுகாவில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

-----------

நீலகிரி மாவட்டத்தில் மழையால் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய 283 பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளை கண்காணிக்க 42 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தெரிவித்துள்ளார்.

-----------

நாகை மாவட்டத்தில் பிரச்சித்தி பெற்ற சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தின் கந்தசஷ்டி திருவிழாவினை முன்னிட்டு பவள ஆட்டுக்கிடா வாகனத்தில் சிங்காரவேலர் வீதிஉலா வந்தார். இதனை ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசித்தனர்.

-----------

கனமழையால் ஏற்பட்டுள்ள மண்சரிவு காரணமாக மேட்டுப்பாளையம் - உதகை மலை ரயில் சேவை இன்றும், நாளையும் ரத்து செய்யப்படுவதாக சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

-----------

ஈரோட்டில் பிறந்து 50 நாட்களே ஆன பெண் குழந்தையை 4 லட்சம் ரூபாய்க்கு, கன்னியாகுமரியை சேர்ந்த தம்பதிகளுக்கு விற்ற வழக்கில் 4 பெண் புரோக்கர்கள் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

-----------

கோபிசெட்டிப்பாளையம் அருகேயுள்ள குண்டேரிபள்ளம் அணை நிரம்பியதைத் தொடர்ந்து அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. இதனைச் சுற்றியுள்ள 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பாதுகாப்பான இருக்க வேண்டும் என்று பொதுப்பணித்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி இன்று சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

வரும் 16ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் 31 அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கான காலிறுதிப் போட்டி நவம்பர் 13ஆம் தேதி நடைபெறுகிறது.

நவம்பர் 15ஆம் தேதி அரை இறுதிப் போட்டியும், 16ஆம் தேதி இறுதிப் போட்டியும் நடைபெறுகிறது.

இன்று நடைபெறும் முதலாவது லீக் போட்டியில் உத்தரப்பிரதேசம் - கேரளா அணிகள் மோதுகின்றன.

மற்றொரு போட்டியில் கர்நாடக அணி – உத்தராகண்ட் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>